
|| काशीपञ्चकम् ||

# காசி பஞ்சகம்

(காசி ஐயகமெய்)



## ஜகத்குரு ஆதி சங்கரர்

தமிழில் மீ. ராஜகோபாலன்



## குறிப்பு

ஸம்ஸ்கிருதச் சொற்களின் தமிழ் வார்ப்புக்களில் ,சரியான உச்சரிப்பிக்கு உதவும்பொருட்டு, சில எழுத்துக்களுக்குக் கீழே காணும் எழுத்துக்கள் கொள்ளப்பட்டன .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ख | க$_2$ (சகதி) | ग | க$_3$ (ராகம்) | घ | க$_4$ (ராகவன்) |
| च | ச (மிச்சம்) | छ | ச$_2$ (சாறு) | ज | ஜ (ஜன்னல்); |
| श | ஶ (ஸ்ஷிவம்) | ष | ஷ (புஷ்பம்) | स | ஸ (ஸர்வம்) |
| ठ | ட$_2$ (பட்டம்) | ड | ட$_3$ (குடம்) | ढ | ட$_4$ (மூடன்) |
| थ | த$_2$ (மதம்) | द | த$_3$ (பாதம்) | ध | த$_4$ (தனம்) |
| फ | ப$_2$ (பருப்பு) | ब | ப$_3$ (இன்பம்) | भ | ப$_4$(பயம்) |
| ह | ஹ (ஆஹாரம்) | | | | |



# || काशीपञ्चकम् ||

## Kasi Panchakam

by Sri Adi Sankarā

## காசி ஐயகமெய்

ஆதி சங்கரர்

குருவின் திருவடிகள் சரணம்.

தத்துவமே மௌனமெனத் தந்தசிவ குருவடிவே
அத்துவித மாய்ந்தளித்த ஆதிகுரு சங்கரரே
நான்யார் எனமனதுள் நட்டவிதை பூத்ததனால்
தான்யார் எனவுணர்த்தும் தகைரமண பகவானே
பெரியவா என்றுலகப் பெருங்கருணை மழையான
அரியனே காஞ்சி ஆச்சார்யப் பேறமுதே

காசீ பஞ்சகக் கருவூலம் மறைமொழியின்
வாசித்து அறியாத வழிமூலம் பெருவழியை
யோசித் தறிகவென ஓதுவித்த நற்குருவைப்
பூசித்து உணருமிப் பொழுதன்றோ பொற்காலம்!

நிறைமொழியில் மறையுண்மை நிற்குமிவ் வேதத்தை
முறைநழுவா தினியதமிழ் முகிழ்த்தமுதத் தேக்குடத்தில்
இறையருளால் நிரப்புமிவன் இயலாமை தீர்த்தருள்க!
கரைகளிலாக் கருணைக் கடலேயென் கற்பகமே!

## பணிவுரை

பகவான் ஆதிசங்கரர் இயற்றியதாகப் பெரியோர்களால் கருதப்பட்டுப் போற்றிப் பாதுகாத்துப் பூஜித்து வருகின்ற நூல்களில் ஒன்று, 'காசி பஞ்சகம்' எனும் இந்த அரிய நூல். ஸ்மஸ்கிருத மொழியிலே, ஐந்தே பாடல்களில், வேதாந்த உண்மைகளைத் திரட்டி, தீர்த்த யாத்திரை எனும் புனிதப் பயணங்களிலே தலை சிறந்ததாகக் கருதப்படும் காசி நகரச் சிறப்பையும், அங்கே அடையும் அளவிலா பெருநிதியமாகிய ஆன்ம அறிவையும் உணர்த்தும் விதமாக, பகவான் ஆதிசங்கரர் உயரறிவை அள்ளித் தருகின்ற அரிய நூல் இது. புனிதத்தில் புனிதமான மணிகர்ணிகா படித்துறையின் வழியே, மாசறுக்கும் மாசிலாக் கங்கையிலே மூழ்கி எழுந்து, அந்த அறிவுச் சுழலின் ஆனந்தத்தினால், 'நான் யார்' எனும் வினாவை விளைத்து, அவ்வினாவின் விடையாகத் தானே திகழ்ந்து, 'ஆன்மாவாகிய நானே ஒளி பொருந்திய காசி நகரம்' எனும் மிகப் பெரிய தத்துவப் பேரறிவை முழங்கும் இப்பாடல்கள், நமக்குக் கிடைத்த பேரமுதம்.

நிலையற்ற உலகின், மாறி மாறிவருவன சுக துக்கங்கள் என்பதை உணர்ந்து, அதனால் கர்ம பலனை எதிர்பார்த்து மட்டுமே காசிப் பயணத்தைச் செய்யாமல், முழுமையான ஆன்ம உணர்வை அடையும் பொருட்டுச் செய்யும் தீர்த்த யாத்திரைகளே நிலையான செல்வம் அடையும் வழி என்பதைத்தான் காசி பஞ்சகம் அருள்கின்றது. அத்தகைய அரிய உண்மை புலப்பட்டு விட்டது என்பதாலேயே, ஜீவன் முக்தரான ஆதி சங்கரர், காசி தன்னுள்ளேயே இருப்பதாக உணர்ந்து, காசி எனும் நகரத்தை வெளியிலே தேடி அலைகின்ற பயணங்கள் கூட எதற்கு என்று கேட்டு, உயர்வு நவிற்சி அணியாலே, காசியின் புகழை வலியுறுத்துகின்றார்.

இந்த ஐந்து பாடல்களும் 'அத்வைதம்' அல்லது இரண்டற்ற ஒருநிலையே உண்மை எனும் வேதாந்த சாரத்தை, காசி நகரப் பெருமைகளைத் துதிப்பதன் மூலம், நமக்கு எடுத்துரைக்கின்றன. இப்பாடலின் கருத்துக்களை, முற்றும் தன்னை உணர்ந்து, முக்தி எனும் விடுதலையினை இவ்வுடல் இருக்கும்போதே அடைந்து விட்ட நிலையில் இருக்கின்ற ஜீவன் முக்தர்களுடைய கருத்தாக மட்டுமே நாம் எடுத்துக் கொள்வது மிகவும் முக்கியம். 'என்னுள்ளேயே காசியும், கயையும், பிரயாகையும், கங்கையும், காசி விஸ்வநாதரும், பவானி அன்னையும் இருப்பதனால், எதற்காக வேறு புண்ணிய யாத்திரைகள் செய்ய வேண்டும்' என்று ஆதி சங்கரர் இறுதியில் கேட்கிறாரே என்று வாதித்து, என்னைப்போன்ற எளிய மக்கள், புனித யாத்திரைகளையும், பெரியோர்கள் காட்டிய தர்மப் பணிகளையும், முறைகளையும் விட்டு விடலாம் என எண்ணினால் அது பேதமை.

ஜீவன் முக்தராக ஆதி சங்கரர் சொல்லிய கருத்துக்களின் சாரத்தை நாம் உணர்ந்து கொண்டால், நாம் அடைய வேண்டிய உயரமும், தூரமும் மிக அதிகம் என்பதுபுரியும். அப்பயணத்திற்குப் பல படிகளும் ஏற வேண்டும் என்ற முக்கியமும்

புரியும். அன்பு, பக்தி, தியாகம், உண்மை தேடுதல், தீர்த்த யாத்திரை செய்தல், தவம் எனப் பலவிதப் பண்புகளும், கடமைகளும் ஏற்று முடிக்க வேண்டியதன் முக்கியத்துவமும் நமக்கு விளங்கும். அந்த அறிவோடு, நாம் என்றேனும் ஒரு நாள் காசி நகருக்குச் செல்லும் வாய்ப்பினைப் பெறுவோமேயானால், காசி பஞ்சகம் உணர்த்திய கருத்துக்களை எல்லாம் மனதில் விளக்காக ஏற்றி வைத்து, அதன் வெளிச்சத்திலேயே, அங்கே நல்லுண்மையை, நல்லருளை நாம் எல்லோரும் தேடிட முடியும். அந்தக் குறிக்கோளே, இந்நூலைப் படிப்பதன் நோக்கமாக வேண்டும்.

கடனுக்குக் கருமங்கள் செய்து, கங்கையிலும் ஒரு முழுக்கைப் போட்டுவிட்டு, எதையாவது காசியில் விட்டு விட்டு வரவேண்டும் என்ற சொல்லப்படும் நியதியை நினைத்து, 'இனிமேல் பாகற்காய் உண்ணேன்' என ஒரு பயனுமில்லாத உறுதி ஒன்றையும் எடுத்துக் கொண்டு, ஊருக்குத் திரும்புகின்ற அலட்சியப் போக்கு இல்லாமல், காசிப் பயணத்தின் ஒவ்வொரு கணத்தையும், சுகத்தை நோக்கி நடத்துகின்ற வழியாக எண்ணி, நம்முடைய புற, மன அழுக்குகளைக் கங்கையிலே கொட்டும்போது, 'அன்னையே, என் அழுக்கை அகற்றிய சுத்தப் பெருவெளியே' எனவெல்லாம் நெகிழ்ந்து, காசியைத் தானாகவே நினைத்து, அங்கே, சுத்தமும், புனிதமும் நிறைவதற்கான சேவையையும், பிரார்த்தனைகளையும் திரும்பத் திரும்ப அளித்து, நாம் திருந்தியவர்களாகத் திரும்பி வருவோம். அதற்காகவே, காசி பஞ்சகம் எனும் இவ்வரிய பாடல்களின் பொருளையும், தத்துவ விளக்கங்களையும் நாம் அறிந்து உணர்வது அவசியம். அந்த ஏக்கத்தினாலயே, அரிய அமுதான இப்பாடல்களை, சம்ஸ்கிருதம் அறியாதவர்களும், தமிழ் (ஆங்கில) மொழி வாயிலாகப் பயிலவேண்டும் எனும் நன் முனைப்பால், குருவருளின் காப்பினால், திருவருளின் சேர்ப்பினால், இங்கே, இவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டது.

காசி பஞ்சகம் என்றால், காசி பற்றிய ஐந்து பாடல்கள் எனக் கொள்ளலாம். ஐந்து பாடல்களும், நம் உள்ளே உண்மையை விதைப்பன. 'உள்ளே' இருக்கும் உண்மையை விளைப்பன. அகத்தின் மெய்ப் பொருளாக விளங்கும் ஐந்து பாடல்கள் என்பதால், 'பஞ்சகம்' எனும் சொல்லுக்கு 'ஐயகமெய்' என மாற்றும் உரிமை பணிந்து கோரப்பட்டது. ஐயம் அகற்றும் மெய் என்றும் இதனைப் பொருள் படுத்திக் கொண்டாலும் பொருத்தமே. இம்முயற்சி, ஆத்ம திருப்திக்காகவும், நாம் இதனை நன்கு பயில வேண்டும் எனும் ஆவலினாலும், ஆக்கப்பட்டது. இதில் தவறுகள் இருப்பின் அவை யாதும் என் பொறுப்பே. அவற்றைக் குருவருளால் தீர்ப்பதும் என் கடனே. இதில் ஏதேனும் குணம் இருப்பின், அதுவும் என் குருவடிகள் தரும் அருளே.

**மீ. ராஜகோபாலன்**

லண்டன்

27 – 02 - 2014

मनोनिवृत्तिः परमोपशान्तिः
सा तीर्थवर्या मणिकर्णिका च
ज्ञानप्रवाहा विमलादिगंगा
सा काशिकाऽहं निजबोधरूपा ॥१॥

மனோநிவ்ருத்தி: பரமோப ஶாந்தி:
ஸா தீர்த$_2$வர்யா மணிகர்ணிகா ச
ஜ்ஞான ப்ரவாஹா விமலாதி$_3$ க$_3$ங்கா$_3$
ஸா காஶிகா(அ)ஹம் நிஜபோ$_3$த$_4$ரூபா || 1||

**மாளுமுடல் அவியும் சூழுமிடர் அகலும்**
**மணிகர்ணி காஓயும் மனது**
**மவுனவழி யாகும் புனிதவிட மேகும்**
**மனமாசைப் பிணந்தீயும் பொழுது**
**ஆளுமுள வான்மா யானுணர்வ தாலே**
**ஆகுநதி கங்கைமா வடிவம்**
**அறிவுமதி பெருகும் விரையுமது புனிதம்**
**ஆன்மன்நான் நற்காசி நகரம்**

(1)

மனோ நிவ்ருத்தி = மன அலைகள் ஓய்ந்த நிலை; பரம = மிக உயர்வான; உப ஶாந்தி:= நிலையான அல்லது மேலான அமைதி; ஸா = என்பது; தீர்த$_2$வர்யா = புனிதத்தில் புனிதமான; மணிகர்ணிகா = மணிகர்ணிகா துறை; ச = மேலும்; ஞான ப்ரவாஹ = உயரறிவு வெள்ளமான; விமல = தூய்மையானதும், தூய்மைப்படுத்துவதுமான; ஆதி$_3$ க$_3$ங்கா$_3$ = முதலாவதான கங்கை; ஸா = என்பது; காசி: = ஒளி மயமான காசி; அஹம் = நான்; நிஜ போ$_3$த$_4$ ரூபா = மெய்யான அறிவு வடிவான (ஆன்மா)

**துயரினை விளைக்கும் ஆசைகளை எல்லாம் களைந்த (ஆசைகளைப் பிணமாக்கி அவித்த) தெளிவும், உண்மையான அமைதியும் கொண்ட (எனது) மனமே (நிலையற்ற உடலாகிய பிணங்களை அவித்து, நிம்மதியான விடுதலையைத் தருகின்ற) புனிதமான மணிகர்ணிகா துறை ஆகும். (அந்த வழியிலேயே**

**சென்று அடைகின்ற) பரந்தும், தூயதாயும் (அனைத்தையும் தூய்மைப் படுத்துவதாயும்) விளங்குகின்ற கங்கை நதியே (தன்னுளே விரிகின்ற) ஆத்ம ஞானம் எனும் தனையுணர் அறிவு ஆகும். (தன்னொளி பரப்பி யாவற்றையும் உயிர்க்கும் ஆன்மாவாகத் தன்னை உணர்ந்து கொண்டதன் பயனால்) ஆத்மாவாகிய நானே (ஒளி மையமான) காசி நகரம்.**

மணிகர்ணிகா எனும் படித்துறை, காசி நகரத்தில் ஓடும் கங்கை நதியின் கரையில் அமைக்கப்பட்ட பல படித்துறைகளிலே மிகவும் புனிதமான ஒன்று. இறந்தோர் உடலை எரித்து, அதன் சாம்பலை மணிகர்ணிகா எனும் துறையிலே கறைத்து, 'பொய்யுடல் எதுவென அறிந்தேன், இனிமேல் மெய்யுடல் தேடி, ஐயனை அடைய, அம்மா, கங்கா தேவி, நீயே உண்மை அறிவாக என்னுள்ளே ஓடு, உன்னுளே யான் மூழ்கி நிலையான ஒளியை வேண்டுகின்றேன்' என்றெல்லாம், உண்மையை விரும்பும் மனிதர்களின் கூட்டம், இந்த மணிகர்ணிகா துறையிலே கூடித் துதிக்கின்றது.

ஒரு சடங்காக மட்டுமே, உடலை எரித்தும், கரைத்தும், பிறகு கங்கை நதியில் கடமைக்காக மட்டுமே ஒரு மூழ்குக் குளியலையும் முடித்துத் திரும்பும் மனிதர்களும் அங்கே இருக்கிறார்கள். இப்புனித யாத்திரையைச் செய்ய மனமிருந்தும், நடத்த முடியாமல் இருப்பவரும் பலர். எல்லோருக்கும், காசிப்பயணத்தின் உண்மை அறிவினைத் தருவதற்காகவே, மிகவும் கருணையுடைய பகவான் ஆதிசங்கரர், காசி பஞ்சகம் எனும் இச்சிறிய நூலில் மிக அரிய கருத்தைத் தருகின்றார்.

இந்த முதல் பாடலிலே, மூன்று சிறந்த உவமைகளுடன் காசியின் பெருமையை பகவான் விளக்குகின்றார். முதல் பாடல் ஒன்றை மட்டுமே புரிந்து கொண்டு நாம் தீர்த்த யாத்திரைகளைச் செய்தாலே, கடனுக்காகவோ, கடமைக்காகவோ செய்கின்ற செயலாக அவை இல்லாமல், முழுமையான ஆன்ம அறிவுச் சாதனையாக அமையும். இறுதிப் பாடல் வரை படித்து முற்றும் உணர்ந்து கொண்டாலோ, தீர்த்த யாத்திரை என்று வெளியில் எதுவும் செய்யாமலேயே, புனித நிலையை நாம் அடைய முடியும் என்பதும் விளங்கும்.

மணிகர்ணிகா எனும் இடத்தில் எல்லா உடல்களும் எரித்துச் சாம்பலாக்கப்படுகின்றன. அந்த அமளியிலும் கூட, மணிகர்ணிகா ஆழ்ந்த அமைதியுடன் விளங்குகின்றது. இறந்தோர் உடல்கள் எரிந்து, அவிந்து போனவுடன், அங்கே அக்கடமைளைச் செய்பவர் எல்லோருக்கும், பெரிய விடுதலை வருவது போன்ற தெளிவு, ஒரு சில நொடிகளுக்காவது, வருவது உறுதி. அதனாலேயே, ஆதி சங்கரர், மணிகர்ணிகா துறையினை, துயரங்களுக்குக் காரணமான அறியாமையையும், ஆசையையும் முற்றும் அழித்து, நல்ல அமைதி பெற்ற மனதிற்கு உவமையாகக் கூறுகிறார்.

மணிகர்ணிகா படித்துறை, 'உடலே யான்' என மயக்கத்தை அறுக்கின்ற தத்துவ பூமியாகும். 'தேஹம் நாஹம் கோஹம் சோஹம்' எனும் மந்திரம், ஒரே வரியில் மிகவும் முக்கியமானதும் இரகசியமானதுமான வேதாந்த சாரத்தைத் தருகின்றது. மணிகர்ணிகா இம்மந்திரத்தின் விளக்கமாகவே இருக்கிறது.

தேஹம் என்பது உடல். 'நான் இந்த உடல் தான்' என்றே, நம்மில் பலரும் அறியாமையால் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அறியாமையினாலேதான் நமக்குள் வேறுபாடுகளும், விருப்பு வெறுப்புக்களும், பிறந்து, வளர்ந்து, தளர்ந்து, சிதைந்து போகின்ற உடலினால் பெரும் துயரங்களும் அடைந்து தவிக்கிறோம். ஒருவரின் இறப்பினைப் பார்க்கும் போதாவது, ஒரு சில நொடிகளாவது, மனதிற்குள், உடல் என்பது நிலையற்றது என்னும் எண்ணம் எழுகிறது. அவ்வெண்ணம் ஆழமாகும்போது, பகுத்தறிவு விரிகிறது. அதனால் ஆயும்போது, வெளியே தெரியும் நமது வல்லுடல் வெறும் பிண்டம் என்பதும், இதற்குத் துணையாக, பிராண, மன, விஞ்ஞான மய கோசங்கள் எனும், மூச்சு, மனம், அறிவு ஆகியவற்றின் கூட்டான மெல்லுடல் என்று ஒன்றும் நமக்குள் இருக்கிறது என்றும் அறிகிறோம்.

ஆனால் இந்த மெல்லுடலும் அழிகிறதே! வல்லுடல் அழியும் போது, மெல்லுடல் வேறொரு வல்லுடலில் புகுந்து, மீண்டும் பிறவி எனும் பிணியில் சிக்கித் தவிக்கின்றதே! இப்படி எல்லாம் தர்ம நூல்களும், பெரியவர்களும் தரும் உண்மைகளைப் படித்தும், கேட்டும் உணர்கிறோம்.

மாறியும், அழிவதுமான இவ்வுடல்களில், 'நான் மட்டும் மாறாமல் இருக்கிறேனே' எனும் அறிவின் வியப்பு எப்போதேனுமாவது மனதில் தோன்றும். அவ்வியப்பே, 'நான் இத்தகைய, மாறி, மாறி அழியும் உடலில் மாட்டிக் கொள்ளும் காரணம் என்ன' எனும் வினாவையும் எழுப்பும். இப்படி மெல்லுடலும், வல்லுடலும் வழக்கத்தில் இருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டு நாம் ஆயும் பொழுது, 'காரண உடல்' என மற்றொரு உடலும் இருக்கிறது, அந்தக் காரண உடல், நமது அறியாமையாலும், ஆசையால் செய்யும் செய்வினைகளின் விளைவுகளாலும் விதைக்கப்பட்டு வளர்கிறது என்றும் அறிகிறோம்.

அதனால், தேஹம் என்பது வல்லுடல், மெல்லுடல், காரணவுடல் எனும் இம்மூன்றும் என்பதும் தெரிகிறது. 'தேஹம் நாஹம்' எனும் வாக்கியம், இம்மூன்று உடல்களும் நான் அல்ல என்று உணர்த்துகின்றது.

அப்படியானால் நான் யார்? கோ அஹம்?

இந்தப் பெரிய கேள்விதான் பகவான் ரமண மகரிஷியை நமக்குக் கொடுத்தது. இக்கேள்விக்கு விடை தேடுவது என்பது, 'தேஹம் நாஹம்' எனும் 'நான் உடல் இல்லை' என்ற வாக்கியத்தை முற்றும் உணர்வதிலேயே அடங்கி இருக்கிறது.

மணிகர்ணிகா துறையிலே செய்கின்ற உடல் அவிப்பு என்பது, தேஹம் நாஹம் எனும் மந்திரத்தின் அறிவால் உடலாசைகளை இழத்தல் அதனால் மனதில் ஆசைகளை அழித்தல் என்பதற்கு உவமை என்று காட்டுகின்றார் பகவான் ஆதி சங்கரர்.

எப்படி அத்தகைய தெளிய மனதை நாம் அடைய முடியும்?

அதை அடைவதற்கு உதவி செய்யவே, மறைகள், நெறிகள் என நமது ஸநாதன தர்மத்தில், ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில் மாற்றம் செய்யக்கூடிய அரிய, எளிய வழிகள் பல தரப்பட்டிருக்கின்றன.

வேதாந்தப்படி, இதற்கான வழியினைச் சுருக்கமாகப் பார்போம்.

'உடலே நான்' எனும் மயக்கத்தை அறுக்க, அதற்குக் காரணமான மூன்று சொற்களை ஆய்ந்து, அவற்றை தவிர்ப்பதன் மூலம், அவைகளின் மயக்கம் விளைக்கும் நாம் செயலை அழிக்கலாம். அச்சொற்கள், 'நான்', 'எனது', 'எனக்காக' என்பன. இவை முறையே 'அஹம்', 'மம', 'மஹ்யம்' என சம்ஸ்கிருத மொழியில் வேதங்களால் காட்டப்படுகின்றன. இம்மூன்று சொற்களுமே, 'ஆணவமலம்' எனும் அறியாமையால் நம்மை நாமே அடையாளம் காணாத செருக்கினைக் குறிப்பன. இவற்றை இழப்பதால், நாமும், தேஹம் நாஹம் எனும் சத்தியத்தை உணர்ந்தவர்கள் ஆகலாம்.

ஆனால் இவற்றை எப்படி இழப்பது? இந்த அடையாளங்களை நாம் இழந்து விட்டால், எப்படி நாம் உலகில் வாழ்வது? இந்த ஐயங்கள் எல்லாம் நமக்கு வருகின்றன.

முதலில் 'மஹ்யம்' அல்லது 'எனக்காக' எனும் சொல்லை எடுத்துக் கொள்வோம்.

'எனக்காக இது', 'எனக்காக அது' என்று பிறரையும், பிற பொருளையும், செயலையும் உரிமை கொண்டாடுவது இந்த ஆணவ மலத்தின் அடையாளம். அந்த உரிமை பெறத் துடிப்பதன் காரணம் ஆசைகள். அதுவே பாசம், பேராசை எனும் கயிற்றில் நம்மை மேலும் இறுக்கி, அதன் மூலம், துயரங்களை விளைவிக்கின்றது.

எப்படி 'எனக்காக' எனும் செருக்கை ஒழிப்பது? இதற்குச் சிறந்த வழிதான் கரும யோகம். இதுதான் முதல் படி. 'கரும யோகம்' எனும் சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருவது இங்கு நோக்கமல்ல. என்றாலும், சுருக்கமாகப் பார்ப்போம்.

கருமம் என்ற சொல்லுக்குப் பல பொருட்கள் இருந்தாலும், நாம் இங்கு எடுத்துக் கொள்ளும் பொருள், ஒருவர் செய்ய வேண்டிய கடமைகள்; அதாவது இதுவே தருமம் என்று, ஒருவருக்கு வேதங்கள் விதித்த கடமைகள் என ஆகும். இக்கடமைகள் இரண்டுவிதமான தர்மமாக (அறமாகக்) காட்டப்பட்டன.

முதலாவது ‘ஸாமான்ய தருமம்’ அல்லது பொது அறம் என்பது. இவை எல்லோராலும், எல்லாக் காலத்திலும், எல்லா இடத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகள். எடுத்துக் காட்டாக, உண்மை பேசு, உயிர்களைத் துன்புறுத்தாதே என்பன எல்லாம் ஸாமான்ய தருமங்களும் அதை ஒட்டிய கடமைகளும் ஆகும்.

எப்படி இந்த ஸாமன்ய தர்ம நெறிகளை எல்லாம் நாம் அறிந்து கொள்வது? எல்லோருக்கும் வேதங்களைப் படித்து அறியும் வாய்ப்பும், வளமும் இருப்பதில்லையே? இவற்றைச் சொல்லித்தருவதும், வழிகாட்டுவதும் தான் குரு, மற்றும் பெரியோர்களின் கடமை. எனினும், எல்லோருக்கும் உதவத்தான், வேதங்கள், மிக எளிய முறையிலே, ஸாமான்ய தர்மத்தாலாகிய செயல்கள் என்ன என நாம் அறிய ஒரு வழியைத் தருகிறது.

‘எதெல்லாம் உனக்கு ஏற்றவை (அனுகூலம்), எதெல்லாம் உன்னால் ஏற்கத் தகாதவை (பிரதிகூலம்) என்று நீ உணர்கிறாயோ, அதையே மற்றவரிடத்தும் நீ கடைப்பிடி, அதுவே ஸாமன்ய தர்மம்’ என்பதாகும். உதாரணமாக, ‘எனக்கு யாராகினும் என்னிடம் பொய் கூறினால் பிடிக்காது’ என்றால், நான் யாரிடமும் பொய் சொல்லக் கூடாது. ‘என்னைத் துன்புறுத்தக்கூடாது’, ‘என் பொருளை யாரும் திருடக் கூடாது’ என்றால், நான் யாரையும் துன்புறுத்துவதோ, பிறர் பொருளையும் திருடுவதோ கூடாது என்பது ஆகும்.

இப்படி ஸாமான்ய தருமம் எனும் பொது நீதியிலான கருமங்களைத் தவிர, ‘விசேஷ தர்மம்’ அல்லது சிறப்புக் கடமைகள் எனவும் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. இச்சிறப்புக் கடமைகள், ஒருவரின் வாழ்க்கை முறை, இடம், காலம் எனப் பல காரணங்களால், ஒவ்வொருவருக்கும் மாறுபட்டு விதிக்கப்பட்டுள்ளன. இதனையே வேதங்கள் ‘ஸ்வதர்மா’ என்று அழைக்கின்றன. இச்சிறப்புக் கடமைகள், பொதுக் கடமைகளை விட முக்கியத்துவமும், சில சமயத்தில் வேறுபாட்டையும் உடையவை. உதாரணமாக, நாட்டைக் காக்கும் போர் வீரனுக்கு உரிய சிறப்புக் கடமைகளில் ஒன்று, நாட்டைக் காக்க, கேடு விளைக்கும் உயிரைக் கொல்லவும் தரப்பட்ட அனுமதி. அப்போது, உயிர்களுக்குத் தீங்கு செய்யாதே எனும் பொதுத் தருமம் தடையாக முடியாது.

மேலும், ‘கருமம் செய்’ என்று சொல்லாமல், ‘கரும யோகம் செய்’ என்பதன் நோக்கம் என்ன?

இது ‘யோகம்’ எனும் விகுதியினால் எழுகிறது. இங்கே யோகம் என்பது, செய்கின்ற கருமங்களின் பலனைத் தியாகம் செய்வது என்ற பொருள் ஆகும். கருமம் செய்வதும், கரும யோகம் செய்வதும், பலனின் உரிமை, பலனின் தியாகம் எனும் இரு வேறு கோணங்களிலே தான் மாறுபடுகின்ரன. ஒரு கருமத்தைக் கடனாகச்

செய்வதற்கும் (அதாவது பலன் இது, இது என எதிர்பார்த்துச் செய்வதற்கும்), யோகமாகச் செய்வதற்கும், முடிவில் வேறுபாடு உண்டு.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், பகவத் கீதையிலே சொல்வது என்ன?

விதித்தபடி ஒருவன் கருமம் செய்யாமல் இருப்பது பாவம்; செய்கின்ற கருமத்தினை முறையாகச் செய்யாமலிருப்பதும் பாவம்; ஏதோ காரணத்தினால், அக்கருமத்தை முழுமையாய்ச் செய்து முடிக்கவில்லை என்றால் பலன் ஏதும் இல்லை; ஆசையுடன் செய்கின்ற கருமத்தை முழுதாகச் செய்தாலும், எந்தப் பலனை எதிர்பார்க்கிறோமோ, அது கிடைத்தாலும் கிடைக்கலாம் அல்லது முன்வினையினால் கிடைக்காமல் போனாலும் போகலாம் என்பது ஆகும். எனவே கருமத்தைக் கடனாகச் செய்வது நலமே எனினும், அது சிறப்பானது ஆகாது.

ஆனால் கருமத்தினை யோகமாகச் செய்பவருக்கு, அதைப் பிழையுடன் செய்தாலும் பாவம் வருவது இல்லை; முழுதும் செய்து முடிக்காமற் போனாலும், சிறிதளவே செய்ததற்கும், அதற்கான பலன் உறுதியாக உண்டு. எப்படிச் செய்தாலும், நிச்சயமாக, கரும யோகத்தினால், தெளிவும் அமைதியுமான மனம் கிடைக்கும். அதுவே உண்மைப் பலன். எனவே உலகத்தில் நாம் செய்யும் செயலை எல்லாம், கரும யோகமாக, 'எனக்காக' எனும் அடையாளம் விலக்கி, பொது நலத்திற்காகச் செய்வதே, வழி. இதுவே கர்ம யோக பலன்.

இரண்டாவதான மயக்கம் 'என்னுடைய' அல்லது 'மம' எனும் பொருள் உரிமை. 'என் மனைவி', 'என் பதவி', 'என் வீடு' என்றெல்லாம் மிகவும் அழுத்தமான உரிமையுடன் செயலாற்றுவது, நமக்குத் தெளிவினைத் தராது. இச்செருக்குக் காரணமும் ஆசையும், மயக்கமும்தான். இதனைத் தவிர்ப்பதற்கு, 'என்னுடையது என்று ஏதுமில்லை, எல்லாம் நின்னுடையது' என்று இறைவனுக்கு அளித்துவிடல் ஒன்றுதான் வழி. தியாகமே சிறப்பு. அதனை அளிப்பதே பக்தி யோகம். அதனாலேதான், பக்தியால் நாம் இறைவனையோ, பெரியோர்களையோ வணங்கும் போதும், துதிக்கும் போதும் என்னுடையது அல்ல எனக் கூறும் 'நம:', 'நமஸ்காரம்' எனும் விகுதியினைச் சேர்த்துச் சொல்கிறோம். மேலும் கரும யோகம் உறுதியாக இருந்தால்தான், பக்தி யோகம் பலப்படும். எனவே கரும யோகம், பக்தி யோகம் இரண்டும் செய்தல் முக்கியம்.

கரும, பக்த யோகங்களின் விளைவு, தெளிவான மதி, அமைதியான மனம். அதன் பயனாக மூன்றாவதாக, அழுத்தமாக ஒட்டிக்கொண்டிருக்கும் 'நான்' என்பது என்ன என்று கேட்கும் துணிவும், நல்லார்வமும் நமக்குள் வரும். 'என்னுடைய', 'எனக்காக' எனும் அடையாளங்கள், தம்மைவிட்டு வெளியான பொருளைப் பொதுவாக குறிப்பதால், அவ்வடையாளங்களை அழிப்பது ஒருவிதத்தில் எளிது. ஆனால், 'நான்' எனும் அடையாளம், நமக்குள்ளேயே இருப்பதால், அதை அழிப்பதோ,

முற்றும் உணர்வதோ மிகவும் கடினம். அதன் வித்து ஆணவம் அல்லது அகங்காரம். அதனை விலக்க உதவுவதே, குருவின் அருளுரை மற்றும் ஞான யோகம்.

இவ்வாறு 'நான்', 'என்னுடைய', 'எனக்காக' எனும் அடையாளங்களை முற்றிலுமோ, அல்லது வெகுவாகவோ, அழித்துவிடுதலே, 'தேஹம் நாஹம்' என்பதை உணரும் வழி. அப்படி உணரும் தருணம், கோஹம் அல்லது நான் யார் எனும் கேள்வி எழும். ஆனால் அக்கேள்விக்கு முன்னேயே, 'நானே எந்தப் பாகுபாடுமில்லாத ஆன்மா' என்பது தெளியும். அதுவே சோஹம். இதுவே உயிர் மூச்சாக இருக்க வேண்டும் என்றுதான், யோக சாஸ்திரங்கள், நாம் விடுகின்ற வெளி மூச்சு, உள்மூச்சினைக் கூட, 'ஸோ', 'அஹம்' எனப் பெயரிட்டு, இவ்வுண்மையை உணர்ந்தவர்களே, 'ஸோஹம்' கடந்தவர்கள். அல்லது 'பரம ஹம்ஸர்' எனப்படுவர் என்று வைத்திருக்கின்றன.

இங்கே ஆதி சங்கரர், மணிகர்ணிகா துறையினை, கர்ம, பக்தியோக முறைகளால், தெளிவும் அமைதியும் அடைந்த மனம் என்று உவமை காட்டுகிறார்.

'சாந்தி' என்றால் 'அமைதி' என்பது பொருள். நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது, கவலைகள், ஆசைகள் ஏதுமின்றி அமைதியாகத்தானே இருக்கிறோம். அது சாந்தி அல்லவா என்றால், அந்த அமைதி உயர்வானது அல்ல. ஏனெனில், உறக்கம் விழித்தவுடனே, மறைந்திருந்த எல்லா ஆசைகளும் கவலைகளும் மீண்டும் வருகின்றன. அதனாலேயே, 'உபசாந்தி' எனக் கூறி, முற்றிலும் அமைதி அளிக்கும் மனதினை இங்கே வலியுறுத்துகின்றார்.

மணிகர்ணிகா துறை வழியே நாம் புனித கங்கையை அடைவது போல, 'தேஹம் நாஹம்' எனும் 'நான் உடல் அல்ல' எனும் தெளிவும், அதனால், அலைகள் இல்லாது ஓய்ந்த மனமும் கொண்டு, அந்த மனதின் வழியே, புனித அறிவாகிய கங்கையைத் தன்னுள்ளே அடைய முடியும். புனித அறிவு, புனித கங்கைக்கு உவமானம் ஆகின்றது. ஞானப் பெருக்கான அந்த நதியிலே குளிப்பதால், கோஹம் அல்லது நான் யார் எனும் கேள்விக்கான பதிலை நாம் அடைவதற்கான வழியும் கிடைக்கிறது, அந்தப் பதில், சோஹம் அதாவது எல்லா உடல்களையும் கடந்த ஆன்மனே நான் என்பதாகும்.

அந்த ஆன்மா, ஒளி மயமாக, ஒளி மையமாக நமக்குள்ளே இருக்கிறது.

முடிவற்ற பெரும்பொருளின் மையம் எங்கு வேண்டுமானாலும் அமையலாம் அல்லவா? அதனாலேயே, முதலும் முடிவுமற்ற ஆன்மா, நம் ஒவ்வொருவுள்ளும் மையம் கொண்டு, ஒளிர்ந்து, அனைத்தையும் ஒளிர்த்து விளங்குகின்றது. அதுவே காசி நகரம் என்று காசியை ஆன்மாவுக்கு உவமையாகக் காட்டப்பட்டது

காசி எனும் சொல்லுக்கு ஒளி மிக்கது எனப்பொருள். 'காச: ப்ரகாச: அஸ்ய இதி காசி:'- அதாவது ஒளிர்ந்து ஒளி தருவது காசி என்பது ஆகும். ஆகாசம், பிரகாசம்

எனும் வடமொழிச் சொற்கள் எல்லாம், காஸ்ய எனும் சொல் மூலத்தின் விரிவே ஆகும். ஒளிந்து இருக்கும் ஒளி மயமான ஒளி மையம் ஆன்மா. அது போலவே, சாதாரணமான இடம் போலத் தோன்றும் இந்த காசி நகரம், ஞான கங்கையும், மணிகர்ணிகா போன்ற புனித வழிகளையும் போர்த்தி விளங்கும் சிவபூமி.

இதனை முற்றும் உணர்ந்து ஜீவன் முக்தர் எனும் நிலையில் இருப்பதாலேயே, ஆன்மாவாகிய நானே காசி நகரம் என, பகவான் ஆதி சங்கரர், இப்பாடல்களிலே கூறுகின்றார்.

यस्यामिदं कल्पितमिन्द्रजालं
चराचरं भाति मनोविलासम्।
सच्चित्सुखैका परमात्मरूपा
सा काशिकाऽहं निजबोधरूपा ॥२॥

யஸ்யாமித$_3$ம் கல்பிதமிந்த்$_3$ரஜாலம்
சராசரம் பா$_4$தி மனோவிலாஸம் |
ஸச்சித்ஸுகை$_2$கா பரமாத்மரூபா
ஸா காஶிகா(அ)ஹம் நிஜபோ$_3$த$_4$ரூபா||

**கற்பிதமாய் மாயக் கண்கட்டு வித்தையாய்**
**காட்சிப் பிரமை யதுவாய்**
**கவினுயிராய் அசையாக் கற்பொருள் புவனமாய்க்**
**கருத்தனு பவ உலகமாய்**
**அற்புதமாய் ஆக்கலெது பொற்பரம ஆத்மனது**
**ஆனசச் சிதானந்த வடிவம்**
**அதுயிது வாகிமதிப் பெருநிதி யமாகவே**
**ஆன்மன்நான் நற்காசி நகரம்**
**(2)**

யஸ்யாம் = எதிலிருந்து; இத$_3$ம் = இந்த; கல்பிதம் = உண்மையைப்போல விளங்கும் கற்பனையான; இந்த்$_3$ர ஜாலம்= விளக்க முடியாத மாயத்தினால்; சராசரம் =அசையும் அசையா

உடல்களான (வெளி உலகங்களும்); மனோ விலாஸம்= விரிந்த மனதின் அனுபவங்களான (உள் உலகங்களும்); பா$_4$தி = விளங்குகின்றதோ; ஸச் சித் ஸுகை$_2$கா = ஸத் எனும் நிலை, சித் எனும் அறிவு, சுகம் எனும் பேரானந்தம் ஆகிய; பரம ஆத்ம ரூபா = பரம்பொருள் வடிவமும், ஆன்ம வடிவமும் ஆகும்; ஸா = என்பது; காஶீ : = ஒளி மயமான காசி; அஹம் = நான்; நிஜ போ$_3$த$_4$ ரூபா = மெய்யான அறிவு வடிவான (ஆன்மா)

**எந்தப் பரம்பொருளிடமிருந்து, விளக்க முடியாத மாயா சக்தியினால், உண்மையைப் போலத் தெரியும் கற்பனையாக, அசையும், அசையா உடல்களால் விளங்கும் வெளி உலகங்களும், (அவற்றின் அனுபவங்களால்) மனதுள் விரியும் உள் உலகங்களும் தோன்றுகின்றனவோ, அந்தப் பரம்பொருளும், (என்னுள் விளங்கும்) ஆன்மாவும் ஒன்றே. அது சத்தியமாக, அதாவது, மாறாது எப்போதும் விளங்குவது. அது சித் அல்லது முழுமையான நிச்சயித்த அறிவு. அது ஸுகம் அல்லது பேரின்பநிலை. (தன்னொளி பரப்பி யாவற்றையும் உயிர்க்கும் ஆன்மாவாகத் தன்னை உணர்ந்து கொண்டதன் பயனால்) ஆத்மாவாகிய நானே (ஒளி மையமான) காசி நகரம்.**

இப்பாடலிலே, அத்வைத தத்துவத்தின் சாரமான இரண்டு உண்மைகளை பகவான் ஆதிசங்கரர் வலியுறுத்துகின்றார்.

முதலாவது பிரம்மம் சத்தியம் ஜகம் மித்தியம் என்பது. அதாவது, பரம்பொருளான பிரம்மம் ஒன்றே எப்போதும் நிலைத்து விளங்குவது. அதனால் அது ‘சத்தியம்’. மற்றவை எல்லாம் மாறிக் கொண்டிருக்கின்ற உலகங்கள். அம்மாற்றம் ‘மித்தியம்’ என்ற பெயரால் சுட்டிக் காட்டப்பட்டது. அதனால் சத்தியம் பரம்பொருள், மித்தியம் மாறிக்கொண்டே இருக்கும் உலகங்கள் என்று அறிய வேண்டும்.

இந்த உலகங்கள் இருவகை. வெளியில் தெரிகின்ற உலகங்கள் ஒரு வகை, நம் ஒவ்வொருவருடைய மனதிலும் அனுபவிப்பது உணர்கின்ற உலகங்கள் ஒருவகை. வெளி உலகங்களில், அசையும் உடல்களான உயிரினங்களும், அசையாத உடல்களான பொருட்களும் விளங்குகின்றன. இவை எல்லாம் பிறந்தும், வளர்ந்தும், தளர்ந்தும், சிதைந்தும் மாறிக் கொண்டே இருக்கின்றன. இந்த வெளி உலகங்களைப் பார்த்து, அதனால் பலவித அனுபவ நிலைகளைத் தன்னுள்ளேயே ஏற்படுத்திக் கொண்டு, நாமெல்லாம் மனதுக்குள் வேறு வகையான உலகங்களையும் படைத்துக் கொள்கிறோம். அதனாலேதான் ஒரே வெளிஉலகத்தை, நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாகப் பார்க்கிறோம்.

மாற்றம் என்பது இருக்க வேண்டும் என்றால், மாற்றமில்லாத ஒன்று ஆதாரமாக இருக்க வேண்டும். மின்சாரத்தின் விசையினை அளக்க, ஒரே நிலையில் விளங்கும் 'கிரவுண்ட்' எனும் சக்தியை ஆதாரமாக் கொள்வது போலவே, இந்த வெளி, உள் உலகங்கள் எல்லாம், சத்தியமான பிரம்மத்தைச் சார்ந்தே மாறுகின்றன. அனுபவிக்கப்படுகின்ற உலகங்கள் எல்லாம், பிரம்மத்தினுடைய விளக்க முடியாத மாயா சக்தியினால், கற்பனையாகப் படைக்கப்பட்டவை என்பதே 'பிரம்மம் சத்தியம், ஜகம் மித்தியம்' எனும் கோட்பாட்டிற்கான சுருக்கமான பொருள்.

இரண்டாவது அத்வைத உண்மை, 'தத்வமஸி' அல்லது 'அஹம் பிரம்மாஸ்மி' அதாவது 'அது நீயே' அல்லது 'யானே பிரம்மம்' எனும் வேதாந்தக் கோட்பாடு. அந்தப் பிரம்மமும், எல்லா உயிர்களுள்ளும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஆன்மாவும் ஒன்றே. பரம ரூபம், ஆத்ம ரூபம் இரண்டும் ஒன்றே என்பதே, பரமாத்மரூபம் எனும் சொல்லினால் காட்டப்பட்டது. அந்த வடிவமே 'ஸத் ரூபம்', 'சித் ரூபம்', 'ஸுக ரூபம்' எனக்காட்டி, பரமாத்மா நிலையானதும், முழுமையான அறிவானதும், மாறாத பேரின்பமானதுமான சச்சிதானந்தம் என்று பகவான் ஆதிசங்கரர் இப்பாடலிலே வலியுறுத்துகின்றார்.

இவ்வுண்மையை முற்றும் உணர்ந்து ஜீவன் முக்தர் எனும் நிலையில் இருப்பதாலேயே ஆன்மாவாகிய நானே காசி நகரம் என, பகவான் ஆதி சங்கரர் கூறுகின்றார்.

कोशेषु पञ्चस्वधिराजमाना
बुद्धिर्भवानी प्रतिदेहगेहे ।
साक्षी शिवस्सर्वगणोऽन्तरात्मा
सा काशिकाऽहं निजबोधरूपा ॥ ३ ॥

கோஶேஷு பஞ்சஸ்வதி$_4$ ராஜமானா
பு$_3$த்$_3$தி$_4$ர் ப$_4$வானீ ப்ரதிதே$_3$ஹ கே$_3$ஹே |
ஸாக்ஷி ஶிவஸ்ஸர்வ க$_3$ணோ(அ)ந்தராத்மா
ஸா காஶிகா(அ)ஹம் நிஜ போ$_3$த$_4$ரூபா || 3||

**ஐயுடற் கூரினதி காரநிதி யானமதி**
**ஆளுமை யதான கலையே**
**ஆனவுட லாதிலும் வீடுடைய நாயகி**
**அம்மணி பவானி உமையே**
**மெய்யுமுணர் வாகிஉயிர் உய்யுநிலை யாகிமனப்**
**பையுள்மறை வானபர மாத்மா**
**ஐயசிவ சாட்சியருட் துய்யநிலைக் காட்சி**
**ஆன்மன்நான் நற்காசி நகரம்**

**(3)**

கோஶேஷு பஞ்சஸூ = ஐந்து கோஸங்களில் அல்லது ஐந்து உடற்கூறுகளில்; அதி$_4$ = மிக முக்கியமான; ராஜமானா = ஆளுமை கொண்டிருப்பதான; பு$_3$த்$_3$தி$_4$: = அறிவாகிய கூறு; ப$_4$வானி = அன்னை பவானி; பிரதி = ஒவ்வொரு; தே$_3$ஹ = உடலிலும்; கே$_3$ஹம் = வீடாகக் கொண்டு; சாக்ஷி ஶிவ: = சாட்சியாக விளங்குகின்ற சிவன்; ஸர்வ க$_3$ணோ = எல்லா உயிர்களிலும்; அந்தராத்மா = ஆழ்ந்த ஆன்ம வடிவானவன்; ஸா = என்பது; காஶி : = ஒளி மயமான காசி; அஹம் = நான்; நிஜ போ$_3$த$_4$ ரூபா = மெய்யான அறிவு வடிவான (ஆன்மா)

**அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்று கருதப்படுகின்ற ஐந்து கோஸம் அல்லது உடற்கூறுகளில், மிகவும் முக்கியமான, ஆளுமைத் தன்மையுடன் விளங்கும், அறிவாகிய விஞ்ஞானமய கோஸத்தில், எல்லா உடல்களிலும், வீடாகக் கொண்டு, விளங்கி வருபவள்தான் அன்னை பவானி. (ஆதாரமாக) எல்லா உயிர்களிலும், சாட்சியாக விளங்கும் ஆன்மாவே சிவமாகிய பரம்பொருள். அந்த ஆன்மாவாகிய நானே (ஒளி மையமான) காசி நகரம்.**

வேதாந்தம், தன்னை அறிதல் எனும் ஆத்ம வித்தைப் பாடங்களில், உடலைப் பலவழிகளிலும் பகுத்தறியத் தருகிறது.

வல்லுடல் (ஸ்தூலம்), மெல்லுடல் (ஸூக்ஷுமம்), வினைவிளையுடல் (காரணம்) எனப் பகுத்தறிவது ஒருவகை. மற்றொரு வகை, உணவுப்பிண்டமான வெளியுடல் (அன்னமய கோஸம்), உயிர்மூச்சு வடிவான காற்றுடல் (பிராணமய கோஸம்), எண்ணஅலைகளான மனவுடல் (மனோமய கோஸம்), பகுத்தறிகின்ற அறிவாகிய உடல் (விஞ்ஞானமய கோஸம்), எண்ணம்,மதியற்று, வெளிஉடல் உணர்வற்று

சுகமாய் இருக்கும் களியுடல் (ஆனந்தமய கோஸம்) என ஐந்து வகையாகப் பார்ப்பது ஆகும். இதிலே களியுடல் எனும் ஆனந்தமய கோஸம், அறியாமையில் ஆழ்ந்த உறக்கம் என்றும், எல்லாம் அறிந்த நிலையில் ஸமாதி அல்லது அறிதுயில் என்றும் சொல்லப்படும். எனவே, இந்தக் களிஉடல் ஒரு அடையும் நிலை என்பதால், இதனைத் தவிர்த்த மற்ற நான்கு உடற்கூறுகளே நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வுடற் கூறுகளிலே, எது மிகவும் முக்கியமானது என்றால், அறிவுதான். அறிவினாலேயே மனமும், மனதின் ஓட்டதினாலேயே, செயலும், செயலுக்கு உதவும் கருவியாக, மற்ற அன்னமய, பிராணமய கோஸங்களும் செயல்படுகின்றன. எனவே அறிவே ஆளுமை கொண்டு விளங்குகிறது. அந்த ஆளுமைச் சக்தி தான், காசியில் இருக்கின்ற பவானி அன்னை. அந்த சக்தியே திரிபுவனம் நிறைத்தவள் என்று வேதங்கள் சொல்வதும், விழிப்பு, கனவு, ஆழ்துயிலாகிய மூன்று அனுபநிலைகளுகளிலும் நிறைந்த அறிவு என்பதும் ஆகும்

பவானி என அன்னை பார்வதியினைக் காட்டுகின்றது இப்பாடல். சம்ஸ்கிருத மொழியிலே 'பவ' என்பதற்கு 'இருத்தல்' என்றும் ஒருபொருள். 'நி' எனும் விகுதிக்கு, 'வழிகாட்டுதல்', 'உள்ளிருத்தல்' என்றும் பொருள். அதனால், ஆளுமைச் சக்தியாகத் தன்னுள் விளங்கும் அறிவாகிய பவானி, வழிகாட்டுகின்ற, உள்ளிருத்தும் ஆன்ம ஞானத்தைக் குறிப்பதாக்க் கொள்ளலாம். பகவான் ஆதிசங்கரரின் பவானி அஷ்டகம் எனும் எட்டுப் பாடல்களான துதியினை, இப்பொருளின் விளக்கமாகப் படிக்கும்போது, உண்மையின் ஆழம் ஒளிரத் தெரியும்.

எல்லா உடற்கூறுகளையும் தாண்டி, நிறைந்து விளங்கும் பவானியெனும் சக்திக்கு ஆதாரமாக, சாட்சியாக மட்டுமே விளங்குகின்ற ஆன்மாவே, காசி நகரில் இருக்கும் சிவபெருமான். கடந்து உள்ளே இருக்கும், கடவுள் அதுவே. இவ்வாறு அரிய அத்வைதக் கருத்துக்களைக் காசி நகரத்துக்கு உவமையாகக் காட்டிய பகவான் ஆதிசங்கரர், ஜீவன் முக்தர் எனும் நிலையில் இருப்பதாலேயே ஆன்மாவாகிய நானே காசி நகரம் எனக் கூறுகின்றார்.

काश्यां हि काशते काशी
काशी सर्वप्रकाशिका।
सा काशी विदिता येन
तेन प्राप्ता हि काशिका ॥४॥

காஶ்யாம் ஹி காஶதே காஶீ
காஶீ ஸர்வப்ரகாஶிகா|
ஸா காஶீ விதி₃தா யேன
தேன ப்ராப்தா ஹி காஶிகா || 4||

மெய்யிதே காசியென் மெய்யதே மெய்யுளே
மிளிரொளி நற்காசி நகரம்
மேதினி எலாமுயிர்த் தேயொளிர்த் தீபமாய்
மேவுமொளி நற்காசி நகரம்
மெய்யிதை மெய்த்தறிந் துய்த்தரே தூயவர்
மேன்மை அளிக்கும் முக்தி
மேலான்ம நிலைமுழு தானான கலையது
மெய்யது நற்காசி நகரம்
(4)

காஶ்யாம் = உடலாகிய காசியில்; ஹி = உண்மையில்; காஶதே காஶீ = ஒளிர்வதாகிய (ஆன்மாவாகிய) காசி; காஶீ ஸர்வப்ரகாஶி= அனைத்தையும் ஒளிமயமாக்கிடும் காசி; ஸா = எதுவோ (அது); யேன எவரால்; காஶீ= காசி; விதி₃தா= உணரப்பட்டதோ; தேன = அவருக்கே; காஶிகா = விடுதலை எனும் காசி; ப்ராப்தா ஹி = உண்மையில் அடையப்படுவதாகும் (4)

இவ்வுடலே உண்மையில் காசி. (இதில்) ஒளிர்கின்ற ஆன்மாவே காசி. அனைத்தையும் ஒளிமயமாக்கும் காசியாகிய பரமாத்மாவும் அதுவே என எவரால் உணரப்படுகிறதோ, அவருக்கே, முக்தி அல்லது விடுதலை எனும் காசி அடையப்படுவதாகும்.

இந்த நாலாவது பாடலில், ஆதி சங்கரர், அத்வைத உண்மையினை முற்றும் உணர்ந்தவர்களின் நோக்கும், அவர்கள் அடையும் பயனும் என்ன என்பதை, காசியினை உவமையாக்கிக் காட்டுகின்றார்.

உடலே காசி.  அதாவது ஒவ்வொரு கருவியும், காசியே ஆகும். இறைவனே எங்குமிருப்பதால், எல்லா உடல்களும் பொருட்களும், அவை எந்நிலையில் இருந்தாலும்,  அவை இறைவனே. அப்பரந்த நோக்கே இக்கூற்றின் விளக்கம்.

அந்த உடலில் இருந்து உயிர்த்தும், ஒளிர்ந்தும் விளங்கும் ஆன்மாவே காசி. அந்த ஆன்மாவே பரமாத்மாவாக இருந்து, அனைத்து உடலிலும் ஒளியைத் தருகின்றது. இந்த உண்மையைப் புரிந்து உணர்ந்து கொள்பவர் எவரோ, அவரின் ஆன்ம ஞானமாகிய ஒளியே காசி. அவ்வொளியே, பரமாத்ம உண்மையை உணர்த்துகின்றது.  அதனை உணர்பவர் எவரோ, அவரே முக்தி என்னும் காசியினை அடைவார்.

இவ்வாறு, உடலாகிய கருவி, பகுத்தறியும் விசையாகிய அறிவு, ஆன்ம ஒளியான சாட்சி, ஆன்மாவே பரம்பொருள் எனும் பேருண்மை, அவ்வுண்மையை உணர்வதால் அடையும் முக்தியாகிய பலன் என்று,  கருவி, அறிவு, சாட்சி, கைக்கொள்ளும் ஞானம், முடிவான பயன் என எல்லாமே காசி என்று உவமானம் காட்டப்படுகின்றது.

काशीक्षेत्रं शरीरं त्रिभुवनजननी व्यापिनी ज्ञानगंगा
भक्तिः श्रद्धा गयेयं निजगुरुचरणद्ध्यानयोगः प्रयागः।
विश्वेशोऽयं तुरीयः सकलजनमनः साक्षिभूतोऽन्तरात्मा
देहे सर्वं मदीये यदि वसति पुनः तीर्थमन्यत्किमस्ति ॥५॥

காஶீக்ஷேத்ரம் ஶரீரம் த்ரிபு4வனஜனனீ வ்யாபினீ ஞானக3ங்கா3
ப4க்தி: ஶ்ரத்3தா4 க3யேயம் நிஜகு3ருசரணத்3 த்4யானயோக3: ப்ரயாக3:|
விஶ்வேஶோ(அ)யம் துரீய: ஸகலஜனமன: ஸாக்ஷிபூ4தோ(அ)ந்தராத்மா
தே3ஹே ஸர்வம் மதீ3யே யதி3 வஸதி புன: தீர்த2மன்யத்கிமஸ்தி || 5||

காசி நகரெனது காயம் - மூநிலை
காட்டும் அறிவுநற் கங்கை!
கூட்டும் பக்தியொடு சிரத்தை
குவியும் இடமினிய கயையே!
வீசும் குருவினடி சேவை - பணி
விரியும் சரணப்பிர யாகை!
நாட்டும் துரியவெளி ஆட்சி - விஸ்வ
நாதன் ஆன்மனே சாட்சி
எனவென் னுடல் மதியின் உள்ளே
எல்லா மிருக்கிறது அதனால்
எதனைப் புனிதமென வெளியே - இனி
எதற்குத் தேடலிது கேள்வி! (5)

காஶீக்ஷேத்ரம் = காசி எனும் (புண்ணிய) நகரம்; ஶரீரம் = உடல்; த்ரிபு4வன: = மூவுலகம்; ஜனனி = அன்னை; வ்யாபினி = நிறைந்திருப்பவள்; ஞானக3ங்கா3 = அறிவாகிய கங்கை; ப4க்தி : = பக்தி; ஶ்ரத்3தா 4 = சிரத்தை எனும் பற்றுடைய குறிக்கோள்; க3யேயம் = கயையில் விளங்குகிறது; நிஜ = நம்முடைய; கு3ரு = ஆசான்; சரணத்3 த்4யானயோக3 := திருவடிகளில் பணிந்து செய்கின்ற சேவை; ப்ரயாக:3 = பிரயாகை; விஶ்வேஶ: = விஸ்வநாதர் எனும் பரம்பொருள்; அயம் = இது; துரீய: = விழிப்பு, கனவு, ஆழ்துயில் எனும் முவ்வனுபவ நிலைகளைக் கடந்த துரீயமாகிய இடத்தில்; ஸகல ஜன = எல்லா மனிதர்களின்; மன: ஸாக்ஷிபூ4த: = மனதில் சாட்சி வடிவமாக; அந்தராத்மா = உள்ளத்தைக் கடந்திருக்கும் ஆத்மா; தே3ஹே =

உடலிலே; ஸர்வம் = எல்லாம்; மதீ₃யே = என்னுடைய; இத்யதி₃ = இப்படியிருக்க; வஸதி = உள்ளது; புன: = மீண்டும்; தீர்த₂ம் = புண்ணிய யாத்திரைகள்; அன்யத் = வேறு; கிம் அஸ்தி = எது உள்ளது?

**(எனது) உடலே காசி நகரம். மூவுலகத்திலும் நிறைந்து விளங்கும் அன்னையாகிய கங்கை (என்னுள் இலங்கும்) உயர்ந்த அறிவு. பக்தியும், மாறாத நம்பிக்கையால் கொண்டுள்ள குறிக்கோளுமே கயை எனும் புனித இடம். நல்வழிகாட்டும் குருவின் திருவடிகளில் செய்யும் சேவையே பிரயாகை. விழிப்பு, கனவு, உறக்கம் எனும் மூன்று அனுபவ உலகங்களையும் தாண்டிய துரீயமெனும் நிலையிலிருந்து, எல்லா உயிர்களுக்குள்ளும் சாட்சியாக இருந்துவரும் (என்னுள்ளிருக்கும்) ஆன்மாவே, காசி விஸ்வநாதப் பெருமான். இப்படி என் உடலிலேயே எல்லாமும் இருப்பதால், புண்ணிய யாத்திரைகள் என்று வேறு எந்த இடத்திற்கு நான் போகவேண்டி உள்ளது? (தேவையில்லை.)**

இப்பாடலிலே ஆதி சங்கரர், ஜீவன் முக்தரது அனுபவ நிலையிலே காசி நகரத்தின் பெருமைகளான, அங்கு விளங்கும் ஐந்து மகத்தான பொருட்களும் தன்னுள்ளேயே இருப்பதனால், தான் அந்த உயரிய ஆத்ம அனுபவம் அடைந்து இனி சாதிப்பதற்கு எதுவுமில்லை என்று ஜீவன் முக்தராகிய காரணத்தினால், (நன்றிக் கடனாக இவ்வாறெல்லாம் பாடி வணங்குவதைவிட) வேறு எந்தப் புண்ணிய தீர்த்தங்களை அடைய வேண்டும் என்று கேட்கிறார்.

முதல் பாட்டிலே காசி நகரமே தன்னுள் விளங்கும் ஆத்மா என்று கூறிய ஆதி சங்கரர், இந்த இறுதிப்பாடலிலே, காசியே உடல்; கங்கையே உடலை இயக்கும் நல்லறிவு; அவ்வறிவின் பயனால் விளையும் பக்தியும், சிரத்தையுமே கயை; அப்பக்தியும் சிரத்தையும் கொண்டு, குருவின் திருவடிகளுக்குச் செய்யும் சேவையே பிரயாகை; அதனால் தெளியும் மனதாலும், அறிவாலும், தன்னுள்ளே கடவுள் என உள் கடந்து இருக்கும் ஆன்மாவே காசி நகரத்தில் காட்சி தந்து கொண்டிருக்கும் விஸ்வேஸ்வரன் அல்லது விஸ்வநாதன் என்னும் பரம்பொருள் என்று எல்லாப் பெரும்பயனும் தன்னுள்ளேயே இருப்பதைக் காட்டுகின்றார்.

அழியக்கூடியது என்றாலும், உடல் என்பது ஆன்மா வசிக்கும் வீடானதால், அவ்வுடலைத் தூயதாயும், புனிதமாயும் போற்றி, அதனுடைய உதவியினால், உலக வாழ்க்கையை ஒழுங்காக நடத்த வேண்டும் என்பதே வேதங்கள் நமக்கு அளித்த விதி. எனவே இறையுறையும் கோவிலே நம் உடல் என எண்ணி, அதனை ஒப்புற வளர்க்க வேண்டும். அதனால் உள்ளும் வெளியும் ஒளிர்வதாய் விளங்கும், உடலே காசி நகரம் என்ற உவமையானது.

அருவமான, கண்களுக்குப் புலப்படாத ஆன்மாவே காசி என்று முதல் பாடலில் உவமை காட்டிய ஆதி சங்கரர், கண்ணுக்குத் தெரியும் எல்லா உடல்களும் ஆன்மாவே ஆகும் என்று இங்கே காட்டியிருப்பது, உரு, அரு எல்லாம் இறைமயமே என்பதை விளக்கவே !

திரிபுவனம் அல்லது மூவுலகம் என்பது என்ன? அனுபவநிலையின் திரட்டே உலகம் எனப்படும். இரண்டாவது பாடலிலே இதுவும் சுட்டிக் காட்டப்பட்டது. விழிப்புநிலை (ஜாக்ரத), கனவுநிலை (ஸ்வபன), உறக்கநிலை (ஷுஷுப்தி) எனும் மூன்று வேறுபட்ட அனுபநிலைகளே, ஒவ்வொருவரும் வசிக்கும் மூன்று உலகங்கள். மற்றொரு வகையிலே, வல்லுடல் (தூல சரீரம்), மெல்லுடல் (சூக்ஷ்ம சரீரம்), வினைவிளை உடல் (காரண சரீரம்) என மூன்று உடற்களுக்கான அறிவுநிலையாகவும் (விஸ்வா, தேஜஸ், பிரக்ஞா என்றும்) வேதாந்தம் காட்டுகின்றது. விழிப்பு, கனவு, உறக்கம் எனும் இம்மூன்று உலகங்களும் வேறுபட்டிருந்தாலும், இவற்றுக்கு எல்லாமும் ஒரு தொடர்பு இருப்பதாகக் காட்டி, அறிவினைக் கொடுத்துக் கொண்டிருக்கும் சக்தியே கங்கையாக உவமை காட்டப்பட்டது. இவ்வறிவின் வழியினால் பக்தியும்,திடமான நம்பிக்கையும் கொண்டு பரம்பொருளை நாடும் ஊக்கம் வருகின்றது.

நம்மிலும் உயர்ந்த பொருளில் வைக்கும் மாறாத அன்பே பக்தி எனப்படும். அப்பக்தி நிலைத்திருக்க, எதையெல்லாம் செய்ய வேண்டுமோ, அவற்றை உறுதியுடன் செய்வது சிரத்தை எனப்படும். பக்தியும், சிரத்தையும் கயை எனும் காசி நகரத்தில் உள்ள புனித இடத்துக்கு உவமையாகக் காட்டப்பட்டது. கயை எனுமிடத்தில்தான், மூதாதையருக்கான நினைவு வழிபாடுகளை நாம் செய்கிறோம். சிரார்த்தம் என அப்புனிதச் செயல்களுக்கு வந்த பெயரின் காரணம், அவை சிரத்தையினால் செய்யப்படுபவை என்பதாலேயே ஆகும். பகவத் கீதையில், பகவான் கிருஷ்ணர் ‘சிரத்தாவா லபதே ஞானம்’ அதாவது, சிரத்தையின் பயனே ஞானம் என்று சொல்கிறார். அத்தகைய சிரத்தை இருப்பதால்தான், நாம் நமக்கு நல்ல வழிகாட்டக்கூடிய குருவினை, பெரியோர்களை, நல்லுரைகளை, நற்சொற்பொழிவுகளை எல்லாம் நாடிச் செல்ல முடிகிறது. அவர்களிடமும், அவர்கள் கூறும் நல்லுரைகளிலும் மதிப்பும், உயர்வும் வைத்து, அன்னாரின் திருவடிகளுக்கும் பணி செய்து உண்மையான ஞானத்தை அடைய முடிகிறது. சிரத்தையினால் செய்யும் சேவை பிரயாகை என்று உவமை காட்டுகின்றார் பகவான் ஆதி சங்கரர்.

பிரயாகை எனுமிடம் கங்கை, யமுனை, மற்றும் கண்ணுக்குப் புலப்படாத ஸரஸ்வதி ஆகிய மூன்று நதிகளின் சங்கமம் ஆகுமிடம். இதற்குத் ‘திரிவேணி சங்கமம்’ என்று பெயர். இவ்விடத்தில் குளிப்பதும், அங்கு குளித்து எழுந்தபிறகு, நமக்குப் பிடித்தமான ஒன்றை விடுவதும் நல்ல வழிதரும் என்பது பெரியோர்களின் மொழி. அங்கே குளித்துவிட்டு, ‘இனி இனிப்பு சாப்பிடமாட்டேன்’, ‘இந்த நிறம் அணிய

மாட்டேன்' என்றெல்லாம் உறுதி கொள்வது உயரிய பலனைத் தராது. வேண்டுமானல், ஒருவித வைராக்யம் அல்லது உறுதியான மனம் அடைவதற்கு உதவலாமே தவிர, ஆழ்ந்த பயன் வராது. அதனால், முதலில் இப்பழக்கங்களுக்கு என்ன தத்துவ விளக்கம் என்பதை அறிய வேண்டும்.

கங்கையே விழிபுணர் அறிவு. யமுனை அதனைச் சார்ந்த கனவுலகறிவு. கண்ணுக்குத் தெரியாத ஸரஸ்வதி ஆழ்துயிலறிவு. அதாவது, நம்முடைய மூன்று அனுப நிலைகளும் (விழிப்பு, கனவு,ஆழ்துயில்) மூன்றும் ஒன்றாய் இருக்கும் நிலையைத் தான், திரிவேணி சங்கமம் குறிக்கின்றது. அத்தகைய நிலை வருவது மிகவும் அரிது; தவமும், சமாதி எனும் பெரு நிலையும் எய்தினால்தான், நம்முடைய இந்த மூன்று உலகங்களும் ஒன்றாகும் நிலை கிடைக்கும். எனவே, அவ்விடம் ஒரு அரிய வாய்ப்பு என்று கொள்ளலாம்.

இந்த மூன்று அனுபவ நிலைகளும் ஒன்றாய் இருப்பதால் என்ன பயன்?

இதற்கு ஒரு புராணக் கதையினைப் பார்ப்போம். சிவானந்த லஹரி எனும் துதியில், 'த்ரயீவேத்$_3$யம் ஹ்ரு$_2$த்$_3$யம் த்ரிபுரஹர மாத்$_3$யம் த்ரிநயனம்' என்றெல்லாம் சிவசக்தியினரைத் துதிக்கும் ஆதி சங்கர்ர், 'திரிபுரஹாரம்' என்ற சொல்லினால், மூவுலகத்தையும் அழித்தவர் என்று அழைக்கிறார்.

'திரிபுர ஹாரம்' எனும் சொல்லினால், இரும்பு, வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் ஆன உலகங்களை ஆண்டு கொண்டிருந்த, தாராகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி எனும் முவ்வடிவான கொடிய அரக்கர்களைக் கொன்ற சிவன் என்று பொதுவான பொருள் கொள்ளப்படுகின்றது.

சிவபுராணத்தின்படி, சிவன், பூமியைத் தேராகவும், பிரம்மாவைச் சாரதியாகவும், மேருவை வில்லாகவும், திருமாலை அம்பாகவும், ஆதிசேடனை நாணாகவும் அமைத்து, தங்கம், வெள்ளி, இரும்பாலான மூன்று உலகங்களும் ஒரே கோட்டில் இணையும் போது, அம்பினைச் செலுத்தி, அல்லல் இழைத்து வந்த மூன்று அரக்கர்களையும் அழித்தார் என்பது புராணம்.

அதன் மறைபொருள் என்ன?

சம்ஸ்கிருத மொழியிலே 'லோகம்' எனபதற்கு 'உலகம்' என்பது சரியான பொருள் அல்ல! 'லோகம்' என்பது ஒரு அனுபவ நிலை. உதாரணமாக 'நரக லோகம்' என்பது, மீளாத் துயராகிய அனுபவ நிலையைத்தான் குறிக்கும். அந்த நிலை எங்கு வேண்டுமானாலும் விளையும். அதுபோலவே, 'திரிபுரம்' எனும் சொல், மூன்று லோகங்கள் அல்லது மூன்று அனுபவ நிலைகள் என்பதைக் குறிக்கும். இவை ஒரு உயிரினைப் பொறுத்தவரை, விழிநிலை அல்லது ஜாக்ரதா, கனவுநிலை அல்லது

ஸ்வப்னா, ஆழ்துயில் அல்லது ஷுஷுப்தி என, அந்த ஜீவாத்மாவின் அனுபவ நிலைகள் என்று ஆகும்.

இந்த ஒவ்வொரு அனுபவ நிலையையும் ஜீவாத்மா தனித்தனியாக அனுபவிப்பினும், ஆத்மாவின் அருளால், இம்மூன்று அனுபவங்களுக்கும் ஒரு உறவு ஏற்பட்டு, நமக்கும் உலகில் வாழ்க்கை எனும் பயணம் கிடைக்கிறது.

மற்றொரு வகையில், வல்லுடல் (பூத சரீரம்), மெல்லுடல் (ஸூக்ஷ்ம சரீரம்), வினையுடல் (காரண சரீரம்) என ஜீவாத்மா உழலும் மூன்று உடல்களையும் இந்த 'திரிபுரம்' எனும் சொல் குறிக்கும். எல்லா உயிர்களின் பொருட்டாகப் பார்த்தால், இவை முறையே அண்டங்கள் (விஷ்வா), அணுக்கூறாதிகள் (தேஜஸ்), அகண்டமாயை (பிரக்ஞா) என மூன்று பரந்த அனுபவ நிலைகளையும் குறிக்கும். நமக்கோ, 'நான் இவ்வுடலே' எனும் மயக்கமும், 'தான்' எனும் ஆணவமும் நம்முள்ளே இருந்து கொண்டு, உண்மையை மறைக்கின்ற காரணத்தினால், இம்மூன்று அனுபவங்களையே நாமும் மாறி மாறி அனுபவித்து, பிறகு எப்போதேனும் உடலை விட்டு, மீண்டும் மறு உடலைப் பெற்று, அப்படியான 'சம்சாரம்' எனும் சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கும் ஜீவர்களாக இருக்கிறோம். நம் மயக்கமும், அறியாமையும், ஆணவமுமே புராணம் காட்டும் அந்த அரக்கர்கள். மூன்று அனுபவநிலைகளிலும் தத்தளிக்கும் இம்மூன்றுபேரும் ஒரே ஜீவன்தான் என்பதும், அம்மூன்று நிலைகளும் ஒன்றிய துரீயமெனும் அறிவுணர்துயில் அல்லது சமாதி நிலையிலேதான், இந்த மயக்கம் முற்றும் தெளியும் என்பதும், அம்மயக்கம் தெளிய, பிறவி எனும் மாற்றங்களை விதைக்கும் பிரம்மனும், காத்தல் எனும் மாயத்தில் இருத்தும் மாலனும், இறப்பு என உடலுயிர் அறுக்கும் ருத்திரனும் ஒன்றாகி, சிவமாகிய பர அறிவான அம்பினால், நமது ஆணவத்தைத் துளைக்க வேண்டும் என்பதும் 'திரிபுரஹாரம்' எனும் பதம் விளக்கும் பொருள்.

அப்படி அழித்து அருள் தர, சிவன் பூமியைத் தேராக வைத்துக் கொண்டார் என்பது எதனை வலியுறுத்துகிறது?

பூமியிலே, பிறந்தால் மட்டுமே, சம்சாரம் எனும் வலையினை அறுத்து வெளி வரமுடியும் என்பதே ஆகும். மனிதப் பிறவிக்கே அந்த மகத்தான விடுதலைக்கான சக்தி இருக்கிறது என்பது காட்டப்படுகிறது.

பிரயாகை எனும் புனித இடத்தில் விளங்கும் திரிவேணி சங்கமம், இந்த மூவுலகங்களின் ஐக்கியத்தைக் குறிக்கிறது. அங்கே நாம், மேற்கூறிய உண்மைகளை முற்றிலும் உணர்ந்து, நம்பிக்கையுடன் மூழ்கி எழுந்து, நமக்குப் பிடித்தமானதை விட வேண்டும்.

நமக்கு மிகவும் பிடித்தமானது என்ன?

ஆழமாக ஆய்ந்தால், ஒவ்வொருவருக்கும் பிடித்தது தாமே தான். 'நான்' என்பதே யாவருக்கும் மிகவும் பிடித்த பொருள். அந்த 'நான்' எனும் அகந்தையைத்தான் அங்கே விடவேண்டும். குறைந்த பட்சம், 'நான்' எனும் அகந்தை அழிய முயற்சி செய்வேன் என்ற உறுதியையாவது, அங்கே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே பிராயகையின் தத்துவம்.

அப்படியான உயரிய அறிவை நாம் உணரும்போதே, உள்ளே ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஆன்மாவே, எல்லா உயிர்களிலும், உலகங்களிலும், முன்னே கூறிய மூன்று நிலைகளையும் தாண்டி, சாட்சியாக விளங்கும் உலக நாயகரான விஸ்வநாதர் ஆவார் என்று தெளியும். ஆதிசங்கரர், இந்த அத்வைத தத்துவத்தைத்தான் இப்பாடலில் அழகுறக் காட்டி உள்ளார்.

## முடிவுரை

'நான் யார்' எனும் அறிவே முக்தி !

அவ்வறிவினைப் பெறுவதற்கு, 'சித்த சுத்தி' எனும் தெளிந்த மனதை, முறை தவறாமல் கரும யோகத்தினாலும், 'திடமனம்' எனும் உறுதியான மனதினை, பக்தி யோகத்தினாலும், முதலில் பெற வேண்டும். அத்தகைய மனதினை அடைந்த பிறகே, அழியாமல் அல்லல் படுத்தும் 'நான்' எனும் ஆணவத்தை அழிக்கும் ஞான யோகத்தினைப் பெற முடியும். அந்த ஞானமாகிய மேலான அறிவே 'ஆன்மனை' அடையும் பாதை.

ஆன்மாவை அறிவதால், அதை அடையாலாம் என்பது எப்படி இயலும்? அடைவது என்பது முயற்சியின் பயன் அல்லவா? அறிவதும் அடைவதும் வெவ்வேறாக அல்லவா நமக்குத் தோன்றுகின்றது? வேதாந்தம் என்ன சொல்கிறது?

அடையும் பொருட்கள் இரண்டு வகை - 'ஸாத்ய வஸ்து' அதாவது செயலினால் (அது அறிவு, முயற்சி, பிறர் உதவி எனப் பல சக்திகளாலும்), நம்மிடம் இல்லாத ஒன்றானதாக அடைவது ஆகும். உலகில் நாம் தேடி அடைவன எல்லாமே இத்தகைய பொருட்கள் தான்.

மற்றொரு வகை 'சித்த வஸ்து' அல்லது ஏற்கனவே அடைந்த பொருளை மீண்டும் அடைவது. அடைந்த பொருளை மீண்டும் அடைவது என்பது எதற்காக? நாம் அப்பொருளை அடைந்திருந்தாலும், அறியாமையினால், அப்பொருள் நம்மிடம் இல்லை என நினைத்து, அப்பொருளைத் தேடுவதுதான் அதன் பொருள்.

அப்படியானால், அடைந்த பொருளை மீண்டும் அடைய உதவுவது எது? அது அறிவுதானே அன்றி, செயல் அல்ல ! 'நம்மிடம் அது இல்லை' எனும் அறியமையை விடுதல் அல்லது 'நாம் ஏற்கனவே அடைந்திருக்கிறோம், அதை அடைய வேறு எந்தப் புறச்செயலும் தேவையில்லை' என நாம் அறிவதே போதும்.

'தலைக்கு மேலே இருக்கின்ற' மூக்குக் கண்ணாடியைச் சில நிமிடங்கள் 'காணோமே' எனத் தேடினாலும், அது தலையிலேயே இருக்கிறது எனும் அறிவினாலேயே அப்பொருளை மீண்டும் அடைவது போலத்தான், தன்னுள்ளே இருக்கும் பிரம்மம் ஆகிய ஆன்மாவை, நாம் அறிவதாலேயே, நம்மால் அடைய முடிகிறது.

ஆழச் சிந்தித்தால், அடையப்படுவதும், அறியப்படுவதும் கூட நிலையற்றதல்லவா? நம்மிடம் இல்லாத பொருட்களை, நாம் எப்போதாவது பெற்றாலும், அவை மீண்டும் எப்போதாவது போய்விடும். இது உறுதி. உடல் என்று ஒன்று ஒரு சமயத்தில் நமக்குக் கிடைத்தது. அதனால்தான், ஒரு சமயத்தில் அவ்வுடல் போய்விடுகிறது. உடலால் அடையும் எல்லாப் பொருட்களும் அப்படியே நம்மை விட்டுப் போய்விடும். ஆனால் எப்போதும் இருப்பதை நாம் அடைய வேண்டியதில்லை. அறிய வேண்டியதில்லை. அதை நாம் இழக்கவில்லை எனும் அறியாமையை இழப்பது ஒன்றுதான் தேவை. இதனைத் தருவதே ஞான யோகம். அதனால், நாம் அந்த 'சித்த வஸ்து' வாகவே ஆகி, சத்தியமாக இருக்கிறோம்.

இப்பெரிய, இரகசியமான உண்மையினை உணர்த்தும் செயலே, புனித யாத்திரையாகிய காசிப் பயணம். இதனைச் சுட்டிக் காட்டி, நமக்குள் விளங்கும் அறிவாகிய தீபத்தின் திரியினைத் தூண்டி, 'சித்த வஸ்து'வாகிய ஆன்மனை அடையச் செய்வதே 'காசி பஞ்சகம்' எனும் இந்நூலின் குறிக்கோள்.

எண்ணற்ற பெரியோர்கள், காசி பஞ்சகம் எனும் இக்கரும்பின் சாறினைப் பல வகையாகவும் பிழிந்து, புதுப்புதுவிதமான பொருட்சுவையும் அருட்சுவையும் அமையத் தந்துள்ளார்கள், தருவார்கள். அதனால், இவ்வறியானின் உரை, காசி பஞ்சகம் எனும் கதிருக்குக் காட்டிய சிற்றொளி தீபமே என முடிக்கிறேன்.

# நிறைவு

மீ. ராஜகோபாலன்
27 பிப்ரவரி 2014

rajjag@gmail.com